மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** Please sit down.

வினா வரிசை எண் 140, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

140—

கோயில் தேர்

*__7839__—**திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், அருள்மிகு சூலக்கல் மாரியம்மன் கோயில் திருத்தேரினைப் பழுதுபார்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், சூலக்கல், அருள்மிகு மாரியம்மன் விநாயகர் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் நிருவாகம் செயல் அலுவலர் மற்றும் தக்காரால் கவனிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான திருத்தேரின் கட்டுமானம் மேற்கொள்ளவும் மற்றும் பொம்மைகள் பழுதுபார்க்கப்படவும் வேண்டியுள்ளது.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2012 ஏப்ரல் 20]

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: இதற்கான மதிப்பீடு ரூ.4,95,000 செலவில் தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்கான ஒப்பந்தப் புள்ளிகளும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அதனைத் திருக்கோயிலின் நிதியிலிருந்து செலவு செய்வதற்குத் திட்டமிடப்பட்டு, பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் தேரோட்டம் நடத்த திருக்கோயில் நிருவாகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் எழுப்பிய அந்தக் கேள்வியை நான் அனுமதிக்காத நிலையில், அவர் எழுப்பிய அந்தக் கேள்வி அவைக் குறிப்பில் இடம் பெறாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி அவர்கள்.

திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சி தொகுதி, கிணத்துக்கடவு ஒன்றியம், சூலக்கல்லில் அமைந்துள்ள அருள்மிகு மாரியம்மன் கோயில் என்பது, கண்ணொளி இழந்த பலபேர் அங்கு வந்து தங்கி அம்மனின் தீர்த்தத்தைக் கண்ணில் விடுவதன்மூலம் கண்ணொளி பெற்றுச் செல்லும் சக்திவாய்ந்த தொன்மையான ஆலயமாகும். சிதிலமடைந்த அருள்மிகு அம்மனின் தேரைப் புனரமைக்க, கேட்டவுடன் ரூ.4.95 இலட்சங்களை வாரி வழங்கிய ஒன்பதாவது வள்ளல் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம், ஆன்மீகப் பேரொளி அம்மா அவர்களின் பொற்பாத மலர்களுக்கு என் சார்பாகவும், தொகுதி மக்கள் சார்பாகவும், கோடானு கோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தங்கள்மூலம் நன்றியினைச் சொல்லி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]